# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக செய்தி மடல்

செய்தி 17 மடல் 3 மார்ச் – 2017 ₹1.00


## தேசிய அளவில் அதிக இளநிலை ஆராய்ச்சியாளர் இடங்களைப் பெற்றது பல்கலைக்கழகம்



முதுநிலை மற்றும் முனைவர் பட்டப் படிப்புகள் பயிலுவதற்கு வழங்கப்படும் ஆராய்ச்சி உதவித்தொகை பெற, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தால் நடத்தப்பெறும் தேசியப் போட்டித் தேர்வில் கால்நடை மற்றும் மீன்வளப் பாடப் பிரிவில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் 20 இளநிலை ஆராய்ச்சியாளர் இடங்களைப் பெற்றது. இதற்கான பாராட்டு விருதினை 14.02.2017அன்று புதுதில்லியில் நடைபெற்ற இந்திய வேளாண் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் மற்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் ஆராய்ச்சி நிலையங்களின் இயக்குநர்களின் ஆண்டு மாநாட்டில் மாண்புமிகு மத்திய வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத் துறை அமைச்சர் திரு. ராதா மோகன் சிங் அவர்களிடம் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் பெற்றார். துணைவேந்தர் அவர்கள் பாராட்டு விருதினைப் பெறுவதற்குக் காரணமான ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களைப் பாராட்டினார்.

## 35ஆவது ஆண்டு மாநாடு மற்றும் தேசியக் கருத்தரங்கம்

திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்மூலம் இந்தியக் கால்நடை மருத்துவச் சங்கத்தின் 35ஆவது ஆண்டு மாநாடு மற்றும் "அண்மைக் கால மற்றும் எதிர்காலச் சவால்களை எதிர்கொள்ளக் கால்நடை மருத்துவத்தில் புதிய தொழில்நுட்பங்கள், சிக்கல்கள் மற்றும் முன்னேற்றங்கள்" குறித்த தேசியக் கருத்தரங்கம் 22.02.2017முதல் 24.02.2017வரை நடத்தப்பட்டது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் கருத்தரங்கைத் துவக்கிவைத்து, விழா மலர் வெளியிட்டு, சிறப்பு விருந்தினர்களுக்கு விருதுகள் மற்றும் பரிசுகள் வழங்கி உரை நிகழ்த்தினார். அவர் தமது உரையில் பண்ணையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு வேண்டிய திறமைகளைச் சிறப்பு விருந்தினர்கள் பெற வேண்டும் எனக்கேட்டுக்கொண்டார். இந்தியக் கால்நடை மருத்துவச்சங்கத் தலைவர் மற்றும் குரு அங்க தேவ் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி ஆலோசகர் முனைவர் எஸ்.என். எஸ். ராந்தவா அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார். திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் மா. திருநாவுக்கரசு, கால்நடை மருத்துவச் சிகிச்சைத் துறையின் உயர் பயிற்சி மையப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் சே. பிரதாபன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். மைய அமர்வு உள்பட மொத்தம் 10 அறிவியல் அமர்வுகள் நடத்தப்பட்டு, ஒவ்வொரு அமர்விலும் சிறந்த வாய்மொழி மற்றும் சுவரிதழ் ஆய்வுக் கட்டுரை அளிப்பிற்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. நிறைவு விழாவில் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் முனைவர்




பெரு. மதியழகன் அவர்கள் விருதுகள் மற்றும் பரிசுகள் வழங்கி உரையாற்றினார். திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் மா. திருநாவுக்கரசு அவர்கள் தலைமை வகித்தார். இந்தியக் கால்நடை மருத்துவச் சங்கத் தலைவர் முனைவர் எஸ்.என்.எஸ். ரந்தவா அவர்கள் சிறப்புரை ஆற்றினார். திருநெல்வெலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை மருத்துவத் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஆர். ராம்பிரபு அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். பயிற்றுவிக்கும் கால்நடைச் சிகிச்சை வளாகத்தின் பேராசிரியர் முனைவர் கே. ஜெயராஜா அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

## சிகிச்சை இரத்தவியல் குறித்த கருத்தரங்கு

சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் "நாய் மற்றும் பூனைகளில் சிகிச்சை இரத்தவியல், இரத்தச்சோகை அணுகுமுறை மற்றும் இரத்தம் செலுத்துதல்" குறித்த கருத்தரங்கு, 25.02.2017அன்று நடைபெற்றது.

பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் கருத்தரங்கைத் துவக்கிவைத்து, அவசர கால மருத்துவம் குறித்தும், பல்கலைக்கழகத்தில் இரத்த வங்கி மற்றும் அதன் செயல்பாடு மற்றும் இரத்தச்சோகை பாதித்த விலங்குகளுக்கு அதன் பயன்பாடு குறித்தும் துவக்கவுரை ஆற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் முதன்மையுரை ஆற்றினார். கால்நடை மருத்துவச் சிகிச்சைத் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் சே. பிரதாபன், அமெரிக்காவின் பென்சில்வேனியப் பல்கலைக்கழகத்தின் கால்நடை மருத்துவப் புலத்தின் விஞ்ஞானி பேராசிரியர் முனைவர் ஊர்ஸ் ஜீகெர் ஆகியோர் பங்கேற்று உரையாற்றினர். பல்வேறு நாடுகளைச் சார்ந்த 50 கால்நடை மருத்துவர்கள் கருத்தரங்கில் பங்கேற்றனர். ஐடெக்ஸ், ஆல்விடியா, டிஎம்ஸ் ரேபிட் வெட், ஆர்க்டெக், குளோபல் வெட்ஸ், பிடிகிரி, நிகான், ஹேமாக்யூ, சாவாவெட் மற்றும் ஜுடிஸ் நிறுவனங்களின் பிரதிநிதிகள் கருத்தரங்கில் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

### கல்லூரி, விடுதி மற்றும் விளையாட்டு நாள் விழா




ஒசூர், கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரியில் கல்லூரி, விடுதி மற்றும் விளையாட்டு நாள் விழா 19.02.2017அன்று கொண்டாடப்பட்டது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் விழாத் தலைமையேற்றுக் கல்லூரி ஆண்டு மலர் வெளியிட்டு, பல்வேறு கலை நிகழ்ச்சிகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளையும், சான்றிதழ்களையும் வழங்கி, தமது உரையில் கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்புடன் செயல்பட மாணவர்களை ஊக்கப்படுத்தினார். கல்லூரி முதல்வர் முனைவர் கு. மணி அவர்கள் கல்லூரி ஆண்டறிக்கை வாசித்தார். கல்லூரி விடுதிக் காப்பாளர் பேராசிரியர் முனைவர் பெ. சம்சுதீன் விடுதி ஆண்டறிக்கையையும், விளையாட்டுப் போட்டிச் செயலாளர் உதவிப் பேராசிரியர் முனைவர் து. இளையபாரதி விளையாட்டுப் போட்டி ஆண்டறிக்கையும் வாசித்தனர். முன்னதாகக் கல்லூரியின் மாணவப் பேரவைத் துணைத் தலைவர் உதவிப் பேராசிரியர் முனைவர் கோ. ராஜ்மனோகர் வரவேற்புரை ஆற்றினார். மாணவர் பிரதிநிதி செல்வன் த. பிரசாந்த் நன்றி கூறினார்.

### மாணவர் சுகாதார மையம் துவக்கம்

ஒசூர், கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரியில் இந்திய வேளாண் ஆராய்ச்சி கழக மேம்பாட்டு நிதியின் கீழ் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் உடல் நலத்தைப் பேணிக் காக்க நவீன வசதியுடன்கூடிய மாணவர் சுகாதார மையம் நிறுவப்பட்டுள்ளது. இம் மையத்தைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் 03.02.2017அன்று துவக்கிவைத்து, மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் கலந்துரையாடும்போது புதிய மையத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

### தேசியப் பயிற்சி

சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை மருத்துவச் சிகிச்சைத் துறையின், உயர் பயிற்சி மையம் மூலம் ‘‘பண்ணை மற்றும் செல்லப் பிராணிகள் மருத்துவத்தில் நோய் கண்டறிதல் தொழில்நுட்பத்தில் முன்னேற்றங்கள்’’ குறித்த தேசியப் பயிற்சி 01.02.2017முதல் 21.02.2017வரை நடைபெற்றது. பயிற்சியில் குஜராத், அஸ்ஸாம், ஜம்மு & காஷ்மீர், ராஜஸ்தான், மத்திய பிரதேசம், உத்திர பிரதேசம், பீகார், தமிழ்நாடு மற்றும் கர்நாடகா மாநிலங்களின் வேளாண்/கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகங்களில் பணியாற்றும் 25 ஆசிரியர்கள் பங்கேற்றனர். 21.02.2017அன்று நடைபெற்ற பயிற்சியின் நிறைவு விழாவில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் நிறைவுரை ஆற்றிப் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். கல்லூரி முதல்வர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். பேராசிரியர் மற்றும் தலைவர் மற்றும் உயர் பயிற்சி மைய இயக்குநர் முனைவர் சே. பிரதாபன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். உதவிப் பேராசிரியர் முனைவர் பாலகங்காதர திலகர் அவர்கள் நன்றி கூறினார்.

### ‘விவசாயிகளுக்கு முதலிடம்’ திட்டம் துவக்கம்



பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்வி இயக்ககமானது இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் கீழ் ‘‘விவசாயிகளுக்கு முதலிடம்’’ என்ற திட்டத்தின் மூலம் ரூபாய் 95.34 இலட்சம் மதிப்பீட்டில், ‘‘தமிழ்நாட்டின் திருவள்ளூர் மாவட்டத்தில் தொழில்நுட்ப உதவிகள்மூலம் விவசாயிகளின் வாழ்வாதாரமேம்பாடு’’ என்றதிட்டத்தைச்செயல்படுத்திவருகிறது. திட்டம் செயல்படுத்துவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட திருவள்ளூர் வட்டத்தின் கோயம்பாக்கம், தண்ணீர்குளம், பாண்டிஜாவனூர், கரையான்மேடு, மேல்கொண்டையூர், கிளாம்பாக்கம் ஆகிய ஆறு கிராமங்களில் ஒன்றான கோயம்பாக்கத்தில் 24.02.2017அன்று திட்டத்தைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் துவக்கிவைத்தார். மேலும், நாட்டுக்கோழி, ஜப்பானியக் காடை, தானுவாஸ் தாதுப்புக் கலவை, உயிர் உரம், உயிர்ப் பூச்சிக்கொல்லி, களைக்கொல்லி ஆகிய தொழில்நுட்ப உதவிகளை விவசாயிகளுக்கு வழங்கி உரையாற்றினார். தொழில்நுட்ப உதவிகள்மூலம் இரட்டிப்பு வருமானம் ஈட்ட வேண்டும்என்றுதமதுஉரையில்கேட்டுக்கொண்டதுணைவேந்தர் அவர்கள், இன்னும் பல தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்கு

ஏதுவாக இவை குறித்த தமது கருத்துகளை விவசாயிகள் தெரிவிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். திட்டத்தின் முதன்மை ஆராய்ச்சியாளர் மற்றும் விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் நி.கு. சுதீப் குமார் அவர்கள் திட்ட நோக்கங்களை விளக்கியுரைத்தார். பல்கலைக்கழக ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன், சென்னை சீனிவாசா சேவை அறக்கட்டளையின் மேலாளர் திரு. நடனசபாபதி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். முன்னதாகச் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் உழவியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் வி.எம். சங்கரன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். கோயம்பாக்கம் பஞ்சாயத்து முன்னாள் தலைவர் திரு. கே. பக்தவச்சலம் அவர்கள் நன்றி கூறினார். மொத்தம் 500 விவசாயிகள் பங்கேற்றுப் பயன்பெற்றனர்.

## அறிவியல் ஆலோசனைக் குழுக் கூட்டம்

- **காட்டுப்பாக்கம், வேளாண் அறிவியல் நிலையம்:** இந்நிலையத்தின் பத்தொன்பதாவது அறிவியல் ஆலோசனைக்குழுக்கூட்டம் 17.02.2017 அன்று நடைபெற்றது. கூட்டத்திற்குத் தலைமை வகித்த பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மற்றும் அறிவியல் ஆலோசனைக் குழுத் தலைவர் முனைவர் சு. திலகர் அவர்கள் பாரம்பரிய விதைகள் மற்றும் கால்நடை இனங்களைப் பாதுகாத்தல், ஒருங்கிணைந்த பண்ணையத்தை விவசாயிகளிடையே பிரபலப்படுத்தல் குறித்துப் பரிந்துரைகள் வழங்கினார். விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் நி.கு. சுதீப்குமார், பெங்களூரு, மண்டலம்–VIII, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் முதன்மை அறிவியலாளர் முனைவர் சி.வி. சாய்ராம் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டக் கால்நடைப் பராமரிப்பு, வேளாண் துறைசார்ந்த அலுவலர்கள் கூட்டத்தில் பங்கேற்றுக்



கருத்துரை வழங்கினர். வேளாண் அறிவியல் நிலையப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் கே. வேல்முருகன் அவர்கள் 18ஆவது அறிவியல் ஆலோசனைக் குழுக் கூட்டப் பரிந்துரைகளின் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அறிக்கை அளித்தார். தொழில்நுட்ப அலுவலர்கள் அறிக்கைக் காலத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அறிக்கை அளித்தனர்.

- **குன்றக்குடி, வேளாண் அறிவியல் நிலையம்:** இந்நிலையத்தின் பதிமூன்றாவது அறிவியல் ஆலோசனைக் குழுக் கூட்டம் 13.02.2017 அன்று நடைபெற்றது. கூட்டத்திற்குத் தலைமை வகித்த பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் நிலையத்தில் செயல்படுத்தப்பட்ட பணிகளை ஆய்வுசெய்து, பணிகளின் செயல்பாட்டிற்கான பரிந்துரைகள் வழங்கினார். கூட்டத்தில் விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் நி.கு. சுதீப்குமார், பெங்களூரு, மண்டலம்–VIII, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் முதன்மை அறிவியலாளர் முனைவர் எம்.ஜெ. சந்திர கௌடா, சிவகங்கை மாவட்ட அனைத்து வளர்ச்சித் துறைகள், மானாவாரி வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், நபார்டு மற்றும் அகில இந்திய வானொலி நிலையத்தின் அலுவலர்கள் மற்றும் விவசாயப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். வேளாண் அறிவியல் நிலையப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் சு. செந்தூர்குமரன் அவர்கள் 12ஆவது அறிவியல் ஆலோசனைக்குழுக் கூட்டப் பரிந்துரைகளின் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் அறிக்கை அளித்தார். மேலும், ஒவ்வொரு துறை சார்ந்த விஞ்ஞானிகள் அறிக்கை அளித்தனர்.

## ஆளுமைத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி

நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்மூலம் புதுதில்லி, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் மேம்பாட்டு நிதியுதவியுடன் "ஆளுமைத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி" 04.02.2017, 11.02.2017 ஆகிய இரு நாள்கள் அளிக்கப்பட்டது. பயிற்சியில் ஆசிரியர்கள், முதுநிலை மற்றும் இளநிலைப் பட்ட இறுதியாண்டு மாணவர்கள் பங்கேற்றனர்.

## கால்நடை நலம் பேணுநர் திறன் மேம்பாட்டுப் பயிற்சி

தொலைநிலைக் கல்வி இயக்ககமும், ஈரோடு, கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையமும் இணைந்து "கால்நடை மற்றும் கோழி வளர்ப்பில் செயல் திறன் மேம்பாட்டுத் தொழில் பயிற்சி" என்ற தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் நிதியுதவித் திட்டத்தின்கீழ் "கால்நடை நலம் பேணுநர்" குறித்த செயல்திறன் பயிற்சியை 20.10.2016முதல் 19.11.2016வரை நடத்தின. 24.02.2017அன்று நடைபெற்ற பயிற்சியின் நிறைவு விழாவில் தொலைநிலைக் கல்வி இயக்குநர் முனைவர் ச.அ. அசோகன் அவர்கள் பயிற்சி பெற்றவர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். மொத்தம் 31 பேர் பயிற்சியால் பயன்பெற்றனர்.

## பயிற்சி

- திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்மூலம் "நாட்டுக்கோழி வளர்ப்பு" குறித்த பயிற்சி, கோழியின மேம்பாட்டுத் திட்டத்தின் 17 பயனாளிகளுக்கு 08.02.2017 முதல் 10.02.2017வரை அளிக்கப்பட்டது.
- ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் தஞ்சாவூர் நபார்டு வங்கியின் நிதி உதவியுடன் "பசுந்தீவனச் சாகுபடித் தொழில்நுட்பப்" பயிற்சி 14.02.2017, 15.02.2017 ஆகிய இரு நாள்கள் நடைபெற்றது. பயிற்சியினைக் கல்லூரி முதல்வர் முனைவர் க.ந. செல்வக்குமார் அவர்கள் துவக்கிவைத்துத் தலைமையுரை ஆற்றினார். மொத்தம் 22 விவசாயிகள் பங்கேற்றுப் பயனடைந்தனர்.
- தருமபுரி, கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் தருமபுரி புதுவாழ்வுத் திட்டத்தின் 120 பயனாளிகளுக்கு "நாட்டுக் கோழி வளர்ப்பு" குறித்த மூன்று நாள் பயிற்சியை முறையே 13.02.2017–15.02.2017, 27.02.2017–29.02.2017ஆம் நாள்களில் அளித்தது. பயிற்சி நிறைவு விழாவில் பயனாளிகளுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. மேலும், "இலாபகரமான கால்நடைப் பராமரிப்பு முறைகள்" குறித்த புற வளாகப் பயிற்சி 02.02.2017, 10.02.2017ஆம் நாள்களில் முறையே அண்ணாமலைப்பட்டி

மற்றும் ஒட்டப்பட்டியில் நடத்தப்பட்டது. மொத்தம் 51 விவசாயிகள் பயன்பெற்றனர்.

- நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்மூலம் ‘‘சுகாதாரமான முறையில் இறைச்சி உற்பத்தி செய்தல்’’ பயிற்சி 23.02.2017அன்று நடைபெற்றது. பயிற்சியைக் கல்லூரி முதல்வர் முனைவர் இல. குணசீலன் அவர்கள் துவக்கிவைத்தார். பயிற்சியில் நாமக்கல் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களைச் சார்ந்த 17 இறைச்சி விற்பனையாளர்கள் பங்கேற்றுப் பயன்பெற்றனர்.

## இடுபொருள் வழங்கல் மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி



திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்மூலம் தமிழ்நாடு அரசின் நிதியுதவியிலான ‘‘கன்னி மற்றும் கொடி ஆடுகள் வளர்த்தல்’’ என்ற பகுதி II திட்டத்தின்கீழ் ‘‘ஆடு வளர்ப்பில் பராமரிப்பு உத்திகள்’’ என்ற திறன் மேம்பாட்டு பயிற்சி மற்றும் இடுபொருள் வழங்கல் நிகழ்ச்சி 22.02.2017அன்று நடத்தப்பட்டது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் ஆட்டுப் பண்ணையாளர்களுக்கு இடுபொருள்கள் வழங்கி, ‘‘ஏழை மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கு ஆடு வளர்ப்பு’’ குறித்துச் சிறப்புரை வழங்கினார். கல்லூரி முதல்வர் முனைவர் மா. திருநாவுக்கரசு அவர்கள் கன்னி மற்றும் கொடி ஆட்டினங்களின் முக்கியத்துவம் குறித்தும், தமிழ்நாட்டின் தென் வேளாண் பருவநிலை மண்டலத்தில் அவற்றின் பாதுகாப்பு குறித்தும் விளக்கியுரைத்தார். மொத்தம் 20 பண்ணையாளர்கள் பயன்பெற்றனர்.

## நீலநாக்கு நோய்த் தடுப்பூசி விழிப்புணர்வு முகாம்



நாகர்கோவில், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையமானது இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் நிதியுதவியிலான நீலநாக்கு நோய் குறித்த அனைத்து இந்திய இணைப்புத் திட்டத்தின் பல்கலைக்கழக மையமான கால்நடை நலக் கல்வி மையத்தின் தடுப்பூசிகள் ஆராய்ச்சி மையம்–நச்சுயிரித் தடுப்பூசி மற்றும் ரிலையன்ஸ் பவுண்டேசனுடன் இணைந்து 10.02.2017அன்று ராதாபுரம் வட்டம், சிறுமளஞ்சி கிராமத்தில் ‘‘நீலநாக்கு நோய்த் தடுப்பூசி விழிப்புணர்வு’’ முகாமை நடத்தியது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் முகாமைத் துவக்கிவைத்து, நீலநாக்கு நோய் குறித்த மடிப்பிதழை வெளியிட்டுத் தலைமையுரை ஆற்றினார். முகாமில் கால்நடை நலக்கல்வி மைய இயக்குநர் முனைவர் பி.ஐ. கணேசன், விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் நி.கு. சுதீப்குமார், தடுப்பூசிகள் ஆராய்ச்சி மையம்–நச்சுயிரித் தடுப்பூசி மையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஒய். கிருஷ்ணமோகன் ரெட்டி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். நாகர்கோவில், கால்நடை பராமரிப்புத் துறையைச் சார்ந்த வல்லுநர் மருத்துவர் சி. ஜெயபால், உதவி இயக்குநர்கள் மருத்துவர் ஆ. தயாசேகர் மற்றும் மருத்துவர் எஸ். குருசாமி, ரிலையன்ஸ் பவுண்டேசன் மேலாளர் திரு. எஸ். அந்தோணி எட்வர்ட் சிங் ஆகியோர் பங்கேற்றனர். மொத்தம் 2800 செம்மறி மற்றும் வெள்ளாடுகளுக்கு நீலநாக்கு நோய்க்கான தடுப்பூசி அளிக்கப்பட்டது. பண்ணையாளர்களுக்குத் தனுவாஸ் தாதுப்புக் கலவை வழங்கப்பட்டது. பயிற்சி மைய உதவிப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் த. ரவிமுருகன் அவர்கள் முகாமிற்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

## கால்நடை நல முகாம்

திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்மூலம் திருநெல்வேலி மாவட்டம், பழமடை கிராமத்தில் கால்நடை நலம் முகாம் 14.02.2017அன்று நடத்தப்பட்டது. முகாமைக் கல்லூரி முதல்வர் முனைவர் மா. திருநாவுக்கரசு அவர்கள் துவக்கிவைத்தார். இந்தியா சிமெண்ட்ஸ் (உற்பத்தி) இணை தலைவர் திரு. சண்முகம் அவர்கள் முகாமில் பங்கேற்றார். கல்லூரியின் வல்லுநர் குழு 555 கால்நடைகளுக்குச் சிகிச்சை அளித்தது.

## வெறிநோய்த் தடுப்பூசி மற்றும் குடற்புழு நீக்க முகாம்



மாதவரம், பல்கலைக்கழகப் புறநகர் கால்நடை மருத்துவமனையில் இலவச வெறிநோய்த் தடுப்பூசி அளித்தல் மற்றும் குடற்புழு நீக்க முகாம் 16.02.2017அன்று நடைபெற்றது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் முகாமைத் துவக்கிவைத்தார். சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் இரா. ஜெயபிரகாஷ் அவர்கள் முகாமில் பங்கேற்றார். மொத்தம் 282 செல்லப் பிராணிகளுக்குத் தடுப்பூசி அளிக்கப்பட்டது.

## விழிப்புணர்வு முகாம்

சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை உற்பத்தி மேலாண்மைத் துறையில் செயல்பட்டு வரும் வேளாண் வானிலைத் தகவல் சேவை மையமும், டி.வி.எஸ். சீனிவாசன் அறக்கட்டளையும் இணைந்து திருவள்ளூர்

மாவட்டம் கரிக்கலவாக்கம் மற்றும் நத்தமேடு கிராமங்களில் முறையே 04.02.2017 மற்றும் 06.02.2017ஆம் நாள்களில்



வானிலை சார்ந்த கால்நடைப் பராமரிப்பு முறைகள் பற்றிய விழிப்புணர்வு முகாமை நடத்தின. முகாமில் 110 கால்நடைப் பண்ணையாளர்கள் பங்கேற்றுப் பயன்பெற்றனர். முகாமின் ஒரு பகுதியாக நடத்தப்பட்ட கால்நடை மருத்துவ முகாமில் 924 கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது. வேளாண் வானிலைத் தகவல் மையத் திட்ட ஒருங்கிணைப்பு அலுவலர் முனைவர் தி. சிவக்குமார் அவர்கள் முகாமில் பங்கேற்றுப் பண்ணையாளர்களுக்குத் தனுவாஸ் தாதுப்புக் கலவை வழங்கினார். தொழில்நுட்ப அலுவலர் முனைவர் அ. தென்னரசு திட்டத்தின் நோக்கம் குறித்து விளக்கிக் கூறினார். இத்திட்டத்திற்கு மத்திய அரசின் புவி அறிவியல் அமைச்சகம் நிதியுதவி அளித்துள்ளது.

### தீவன விற்பனைத் துவக்கம்

பல்கலைக்கழகச் சுழல் நிதித் திட்டத்தின்கீழ் ஒசூர், கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரியின் தீவன உற்பத்தி ஆலையானது கிருஷ்ணகிரி மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களின் பண்ணையாளர்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு வகையான கால்நடை மற்றும் கோழியினத் தீவனங்களை உற்பத்தி செய்கிறது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் 03.02.2017அன்று தீவன உற்பத்தி ஆலையைப் பார்வையிட்டுக் கோழித் தீவன விற்பனையைத் தொடங்கி வைத்தார்.

### தர உறுதி ஆய்வகத்திற்கு அங்கீகாரம்

இந்தியத் தரக் கட்டுப்பாடு ஆணையத்தின் தேசியத் தர அங்கீகார வாரியம் நாமக்கல், கால்நடைத் தீவனப் பகுப்பாய்வு மற்றும் தர உறுதி ஆய்வகத்திற்கு ஐஎஸ்ஓ விதிகளுக்கு உட்பட்டு ஆய்வகத்தில் செயல்படுத்தப்பட்ட பரிசோதனை நடைமுறைகளை அங்கீகரிக்கும் வகையில் இரண்டு ஆண்டுகளுக்குத் தரச்சான்று அளிப்பு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### விருதுகள் மற்றும் பதக்கங்கள்

பி.வி.எஸ்சி. மற்றும் ஏ.எச். முதலாம் ஆண்டு மாணவர் திரு. எஸ். கோபி தெலுங்கானா டென்னிகாய்ட் சம்மேளனம் 03.02.2017முதல் 06.02.2017வரை நடத்திய 18 வயதுக்குக் கீழ் உள்ள இளையோருக்கான 35ஆவது தேசிய அளவிலான டென்னிகாய்ட் போட்டியில் தனிநபர் ஒற்றையர் பிரிவிலும், ஒட்டுமொத்தக் குழுப் போட்டியிலும் முதல் இடத்தைப் பிடித்தார். நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை ஒட்டுண்ணியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் கு. பொன்னுதுரை அவர்களுக்குக் கோழிகளைத் தாக்கும் ஒட்டுண்ணிகள் குறித்து ஆராய்ச்சிகளை மேற்கொண்டதற்காகக் கர்நாடகா சிவமோக கால்நடை மருத்துவக் கல்லூரியில் 15.02.2017முதல் 17.02.2017வரை நடைபெற்ற XXVI-NCVPஇல் டாக்டர் கல்யாண சுந்தரம் நினைவு விருது வழங்கப்பட்டது. கல்லூரியின் சிகிச்சைத் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் கு. விஜயகுமார் அவர்களுக்கு 22.02.2017முதல் 24.02.2017வரை நடைபெற்ற இந்தியக் கால்நடை மருத்துவச் சங்கத்தின் 35ஆவது ஆண்டு மாநாடு மற்றும் தேசிய கருத்தரங்கில் சிறந்த ஆய்வுக் கட்டுரைச் சுவரிதழ் மற்றும் இரு சிறந்த ஆய்வுக் கட்டுரை வாசித்தலுக்கான விருதுகள் வழங்கப்பட்டன. மேலும் கால்நடை மருத்துவச் சிகிச்சைத் துறைசார்ந்த முனைவர் பட்ட மாணவி மருத்துவர் ஏ.எஸ். ஷாலினி மற்றும் முதுநிலைப் பட்ட மாணவர் மருத்துவர் ஏ. பெரியசாமி ஆகியோர்க்கு முறையே சிறந்த ஆய்வுக் கட்டுரைச் சுவரிதழ் விருது மற்றும் ஆய்வுக் கட்டுரை வாசித்தலுக்கான விருதுகள் வழங்கப்பட்டன.

### விருது

சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை உயிர்த் தொழில்நுட்பத் துறையின் மருத்துவர் டி.எஸ். சரவணன், திவ்யா மஞ்சரி கே மற்றும் முனைவர் எம். பார்த்திபன் ஆகியோர்க்கு, 2016 டிசம்பர் 13–15ஆம் தேதிகளில் கோயம்புத்தூர் வேளாண் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற மாசு பாதித்த பகுதி மறுசீராக்கம் குறித்த பன்னாட்டுக் கருத்தரங்கின் தூய்மை இந்தியா 2016இல் ‘சிறந்த ஆய்வுக் கட்டுரைச் சமர்ப்பித்தலுக்கான விருது’ அளிக்கப்பட்டது.

**பல்கலைக்கழகத்தின் முதன்மையான நிகழ்வுகள்**

| | | |
|---|---|---|
| பல்கலைக்கழக அளவில் ராகிங்கிற்கு எதிரான குழுக் கூட்டம் | : | 09.02.2017 |
| கல்லூரி முதல்வர்கள் குழுக் கூட்டம் | : | 09.02.2017 |

### நாட்டுநலப் பணித் திட்டப் பணிகள்

- நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நாட்டுநலப் பணித் திட்டம் சார்பாக, “தீயணைப்புச் செயல்விளக்கம்” குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி 23.02.2017அன்று நடத்தப்பட்டது. நாமக்கல் தீயணைப்புத் துறையின் உதவி இயக்குநர் திரு. இளஞ்செழியன் அவர்கள் தீ விபத்தின்போது பாதுகாப்பு



  குறித்து விரிவுரை வழங்கினார். தீயணைப்புத் துறைசார்ந்த குழுவினர் தீவிபத்துக் காலங்களில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்துச் செயல்விளக்கம் செய்துகாட்டினர். கல்லூரி முதல்வர் முனைவர் இல. குணசீலன் அவர்கள் தீவிபத்தின்போது பாதுகாப்பு குறித்துச் சிறப்புரை ஆற்றினார்.

- ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நாட்டுநலப் பணித் திட்டம் சார்பாக உலகப் புற்றுநோய் தினம்–2017 முன்னிட்டு வாய்ச் சுகாதார விழிப்புணர்வு நிகழ்ச்சி 17.02.2017அன்று நடத்தப்பட்டது. நிகழ்ச்சியினைத் துவக்கிவைத்த கல்லூரி முதல்வர்

**Registered with Registrar of Newspapers for India No.TN TAM/2001/5254**
**Posted at Pathrika Channel, Egmore RMS, Chennai - 8.**

**Licensed to post without prepayment No.TN/PMG/(CCR)/WPP-708/15-17**
**Registration No.TN/TBM/32/2015-17**

Posted on 28.03.2017 at Pathrika channel, EGMORE, RMS
Date of publication : 25th and 26th of every month

Printed and Published by
Dr. S.A. Asokan, Ph.D., Director of Distance Education
on behalf of Tamil Nadu Veterinary and Animal Sciences University
and Printed at University Publication Division, Madhavaram Milk Colony,
Mathur Road, Ambathur Taluk, Tiruvallur District, Chennai - 600 051
**Editor : Dr. S.A. Asokan, M.V.Sc., Ph.D., Phone : 044-2432 0411**
**E-mail : dde@tanuvas.org.in**

முனைவர் க.ந. செல்வக்குமார் அவர்கள் மாணவர்களுக்கு வாய்ச் சுகாதாரத்தின் முக்கியத்துவத்தினை விளக்கினார்.



முகாமில் பல் மருத்துவர் த. ஸ்டாலின் மற்றும் குழுவினர் 112 மாணவர்கள் மற்றும் 25 அலுவலர்களுக்கு வாய் மற்றும் பல் பரிசோதனை செய்து ஆலோசனைகள் வழங்கினர்.

### பணி ஒய்வு



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடைப் பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தொற்றியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எம். சேகர் அவர்கள் 28.02.2017அன்று பணி ஒய்வுபெற்றார். 20.02.1957இல் பிறந்த இவர், 31 ஆண்டும் 11 மாதமும் பணியாற்றியுள்ளார்.



பல்கலைக்கழகத்தின் கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநரகத்தின் நிர்வாக அலுவலர் திரு. டி. பாபு அவர்கள் 28.02.2019அன்று பணி ஒய்வுபெற்றார். 20.02.1957இல் பிறந்த இவர், 32 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.



புதுக்கோட்டை, பல்கலைக்கழக மண்டல ஆராய்ச்சி மையத்தின் ஓட்டுநர் திரு. சி. ராமநாதன் அவர்கள் 28.02.2017அன்று பணி ஒய்வுபெற்றார். 15.02.1959இல் பிறந்த இவர், 31 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.



பல்கலைக்கழகத்தின் தடுப்பூசிகள் ஆராய்ச்சி மையம்–நச்சுயிரித் தடுப்பூசியின் முதுநிலை ஆய்வக உதவியாளர் திரு. பி. செல்வராஜன் அவர்கள் 28.02.2017அன்று பணி ஒய்வுபெற்றார். 13.02.1959இல் பிறந்த இவர், 35 ஆண்டும் 09 மாதமும் பணியாற்றியுள்ளார்.



காட்டுப்பாக்கம், கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையத்தின் திறனில்லாப் பணியாளர் திரு. டி. காந்தாளன் அவர்கள் 28.02.2017அன்று பணி ஒய்வுபெற்றார். 16.02.1957இல் பிறந்த இவர், 27 ஆண்டும் 02 மாதமும் பணியாற்றியுள்ளார்.

### அறிவிப்பு

சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் 8 ஏப்ரல் 2017அன்று நடைபெறும் **பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு – 2017**இல் பங்கேற்க உங்களை அழைப்பதில் பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவர்கள் சங்கம் பெருமையடைகிறது.

உங்களுடன் படித்தவர்கள் மற்றும் நண்பர்களுக்கு மாணவர்கள் சந்திப்பைத் தெரியப்படுத்தி நிகழ்ச்சி வெற்றியடையச் செய்யுங்கள்.

உங்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்ய (tanuvasalumni@tanuvas.org.in) என்ற முகவரிக்கு மின்னஞ்சல் செய்து உங்கள் வருகையை உறுதிப்படுத்துங்கள். பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு – 2017க்கான பதிவுக் கட்டணம் தனிநபர் ஒருவருக்கு ரூபாய் 300/–(ரூபாய் முந்நூறு மட்டும்). மேலும் தகவலுக்கு www.tanuvas.ac.in. என்ற இணையதள முகவரியைக் காணுங்கள்.

கூடுதல் தகவலுக்குப் பின்வருபவர்களைத் தொடர்புகொள்க:

முனைவர் வி. அப்பாராவ், பொதுச் செயலாளர், **+919444527875, Email: apparao.v@tanuvas.ac.in**

முனைவர் பி. ஸ்ரீராம், பொருளாளர், **+919840983994, Email: sriram.p@tanuvas.ac.in**

முனைவர் டி.ஏ. கண்ணன், இணைச் செயலாளர், **+919841565079, Email: kannan.t.a@tanuvas.ac.in**

## பதிப்புக் குழு

**முதன்மை ஆசிரியர்**
முனைவர் சு. திலகர், துணைவேந்தர்
தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

**ஆசிரியர்**
முனைவர் ச.அ. அசோகன்
தொலைநிலைக்கல்வி இயக்குநர்

**உறுப்பினர்கள்**
முனைவர் க. குலசேகர்
முனைவர் ஜி. சரத்சந்திரா
முனைவர் பா. டென்சிங் ஞானராஜ்
முனைவர் சி. மணிவண்ணன்
மருத்துவர் அ. ஷ்யாம் பாபு
முனைவர் அ. மணிவண்ணன்
முனைவர் பா. மதுகேஸ்வரன்